ஆழக்கடல் ஏறிவரும் மீனவனின் பாட்டிது
அன்பு மனையாழிருக்கும் வீடு வரை போகுது
ஈழக்கடல் ஏறிவரும் வீரம்உள்ள காற்றிது
என்னுடல் மீது படும் போது திமிர் ஏறுது
கடலம்மா கடலம்மா இன்னும் இல்லை பயமம்மா 2
கடலம்மா கடலம்மா காற்றில் போகும் படகம்மா 2

ஈழத்தமிழரின் சோகம் இன்னும் எத்தனை நாளிலே தீரும் 2
வீர கடற்பலி பாயும் அந்த வேளையிலே துயர் போகும் 2

ஆழக்கடல் ஏறிவரும் மீனவனின் பாட்டிது
அன்பு மனையாழிருக்கும் வீடு வரை போகுது

உன்மடியில் ஏறிவந்து அப்பன் வலை வீசினான்
ஓரிரவு உயிரிழந்து ஊரின் கரையேறினான் 2
ஆன்றவனை கொன்றவனை இன்று மகன் வெல்கிறான்
ஆனையிறவு ஏறிக்கடல் ஏதோ சொல்கிறான்
இல்லை இனி வெகு தூரம் இது எங்கள் தலைவனின் காலம் 2
வெல்லும் கடல்புலி நாளை இனி வீதி எங்கும் விடி காலை
கடலம்மா கடலம்மா இன்னும் இல்லை பயமம்மா 2
கடலம்மா கடலம்மா காற்றில் போகும் படகம்மா 2

ஆழக்கடல் ஏறிவரும் மீனவனின் பாட்டிது
அன்பு மனையாழிருக்கும் வீடு வரை போகுது

பாய்விரித்து படகெடுத்து பாய்ந்து கடல் ஆண்டவர்
பார் முழுதும் தமிழர் என்று போய் திரும்பி மீண்டவர் 2
தாய்மடியில் மீண்டெழுந்து நாங்கள் இன்று பாடுறோம்
காவுங்கடல் புலிகளினால் நாளை கடல் ஆழுவோம்
ஏறிவரும் பகை யாவும் இனி இல்லை என்னும் நிலைஆகும் 2
மூறி அடித்திடும் காத்து கடல் மீதில் புலிக்கொடி ஏற்று
கடலம்மா கடலம்மா இன்னும் இல்லை பயமம்மா 2
கடலம்மா கடலம்மா காற்றில் போகும் படகம்மா 2

ஆழக்கடல் ஏறிவரும் மீனவனின் பாட்டிது
அன்பு மனையாழிருக்கும் வீடு வரை போகுது
ஈழக்கடல் ஏறிவரும் வீரம்உள்ள காற்றிது
என்னுடல் மீது படும் போது திமிர் ஏறுது
கடலம்மா கடலம்மா இன்னும் இல்லை பயமம்மா 2
கடலம்மா கடலம்மா காற்றில் போகும் படகம்மா 2